தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**தமிழ்நாடுதகவல்ஆணையம்**

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணைநாள் 07.07.2026**

**முன்னிலை**
**திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**
**மாநிலதகவல்ஆணையர்**

*****

**வழக்குஎண். SA 9854/H/2024**

ஆ. முரளி — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் — பொது அதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
கும்மிடிப்பூண்டி
திருவள்ளூர் மாவட்டம்

கோரியதகவல்: மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 20.05.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் எவ்வகையான நிலங்கள் தொடர்பான என்னென்ன கோப்புகள்/பதிவேடுகள்/ஆவணங்கள்/குறிப்பேடுகள் பராமரிக்கப்படுகிறது என்பது தொடர்பான தகவல்கள் வேண்டி மொத்தம் 3 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 25.07.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (07.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு ஆ. முரளி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பு | பொதுத்தகவல் அலுவலர் திருமதி. கனகவள்ளி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கும்மிடிப்பூண்டி அவர்கள் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

**ஆணை**

இன்றைய (07.07.2026) விசாரணையின்போது ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 28.01.2026 மற்றும் 02.07.2026 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து அதற்குண்டான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், பொது தகவல் அலுவலர் வழங்கிய தகவல் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனவும், தனக்கு கள ஆய்வு செய்வதற்கு உத்தரவிடுமாறும் தனது வாதத்தை எடுத்துரைத்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் 20.05.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் கோரியுள்ள தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, அவர் ஆய்வு செய்வதை வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து, ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில், மனுதாரரிடமிருந்து உரிய கட்டணத்தை பெற்று, அவரால் கோரப்படும் ஆவணங்களை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, மனுதாரருக்கு வழங்கி, அதனை ஒளிநகலெடுத்து, அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தையும், ஆய்வு செய்த வீடியோ அல்லது புகைப்படத்தை இணைத்து அறிக்கையாக 04.08.2026 அன்று ஆணையத்திற்கு நேரிடையாக சமர்ப்பிக்குமாறு, பொது தகவல் அலுவலருக்கு இதன்மூலம் உத்திரவிட்டு இவ்வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 9854/H/2024
பெறுநர்
பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
கும்மிடிப்பூண்டி
திருவள்ளூர் மாவட்டம்

மேல்முறையீட்டாளர்

திரு ஆ. முரளி
23, ரெட்டியார் தெரு
பெரியபுலியூர் கிராமம்
பூவலம்பேடு அஞ்சல்
கும்மிடிப்பூண்டி வட்டம் - 601 206
திருவள்ளூர் மாவட்டம்

Copy to : Judgement file
MB/PS